அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்

**Provincial Department of Education - NWP**

**வலயம்**

# சமூக விஞ்ஞானப் போட்டி - 2022

**தரம்12/ 13** **நேரம் : 2 மணி 30 நிமி.**

மாணவர் பெயர் : ..................................... வலயம் : ...............

பாடசாலை : ..................................... பாடசாலை வகை : ...............

* **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

- **1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. கொரோனா எனும் தொற்று நோயை முதன் முதலில் சீனாவில் எந்நகரத்தில் கண்டு பிடிக்கப்பட்டது?
   1) வூஹான் 2) ஹார்பீன் 3) நெங்ஜீன்
   4) இன்சுவான் 5) குங்ஹுமின்

2. பொலன்னறுவையின் முதல் கலிங்க வம்சத்து ஆட்சியாளன் யார்?
   1) 1ம் விஜயபாகு 2) 1ம் பராக்கிரமபாகு 3) நிஸங்கமல்லன்
   4) கல்யாணவதி 5) பராக்கிரம பாண்டியன்

3. இலங்கையில் நடைமுறையிலுள்ள தேசிய சட்டம் எது?
   1) கண்டியச்சட்டம் 2) ஆங்கிலேயச்சட்டம் 3) உரோம டச்சுச்சட்டம்
   4) முஸ்லிம் சட்டம் 5) தேசவழமைச்சட்டம்

4. பின்வரும் கனியங்களுள் உலோகக் கனியங்களுக்கு உதாரணம்,
   1) நிலக்கரி 2) சுண்ணக்கல் 3) மங்கனீசியம்
   4) பொசுபேற்று 5) காரியம்

5. வசப மன்னன் பற்றிய சரியான கூற்று யாது?
   1) முதன் முதலாக இலங்கையை ஒன்றுபடுத்தல்
   2) சுரங்க வழி நீர்பாசன திட்டத்தை உருவாக்குதல்
   3) முதன் முதலாக குளம் கட்டுவதற்கு அரச அனுசரணை வழங்கல்
   4) மௌரிய அரச வம்சத்தின் முதல் மன்னன் ஆவான்.
   5) பனாகடுவ செப்பு சாசனத்தை உருவாக்குதல்.

- **இல 6 முதல் 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளில் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தினை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

6. பிரதம நீதியரசரின் கடமைகளைத் தெரிவு செய்க.
   A மனுக்களை ஏற்றுக்கொள்ளல்
   B பிணை வழங்கல்
   C பிஸ்கால் அதிகாரிகள் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள்
   D சட்டத்தரணிகளை சேவையில் இணைத்துக்கொள்ளல்
   E நீதிமன்றத்தின் விதிகளை மறுசீரமைத்தல்
   1) ABCD 2)ABDE 3) ABCE 4) ACDE 5) BCDE (.............)

7. 1ம் காசியப்ப மன்னன் தொடர்பான கூற்றுக்களைக் கொண்ட விடையினைத் தெரிவு செய்க.
A தாதுசேன மன்னனின் மகன் ஆவார்.
B அலகபய மகாராஜா என அழைக்கப்படுவார்
C குபேரருடைய வாழிடம் சீகிரியாவாகும்.
D சீகிரிய காசியப்ப என அழைக்கப்படும்
E முகலன் எனும் மன்னனால் தோற்கடிக்கப்படல்
1) ABCD 2)ABDE 3) ABCE 4) ACDE 5) BCDE (.............)

8. அரசியலில் மிக முக்கியம் வாய்ந்த அம்சங்கள் எவை?
A அரசியல் விஞ்ஞானிகள்
B அரசியல் கட்சிகள்
C அரசியல் அதிகாரிகள்
D எதிர்மறையான மனப்பாங்குடையவர்
E அரசியல் கட்சிகளின் கொள்கை
1) ABCD 2) BCDE 3) ABDE 4) ACDE 5) ABCE (.............)

9. அநுராதபுர இராசதானி பற்றிய விபரங்கள் அடங்கிய விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
A இலங்கையில் முதலாவது இராசதானி
B அநுராதகாமம் அநுராதபுரம் என்று மாற்றப்பட்டது.
C அநுராதபுர இராசதானியை உருவாக்கியவர் விஜயன் எனும் அரசனாவான்.
D மல்வத்து ஓயாவுக்கு அருகில் அமைந்துள்ளது.
E சுமார் 1400 வருடங்கள் இந்நகரம் தலைநகராகத் திகழ்ந்தது.
1) ABCD 2) ABDE 3) ABCE 4) ACDE 5) BCDE (.............)

10. பிரசைகள் அரசியலில் பங்கு கொள்ளச் சந்தர்ப்பம் வாய்ப்பது,
A அரசியலில் அதிகாரிகள் நியமிக்கப்படும் போது
B அரசியலில் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கும் போது
C வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபடும் போது
D அரசியல் கட்சி ரீதியாக அங்கத்தவர் பதவி வகிக்கும் போது
E நிறைவேற்று அதிகாரத்தை நேரடியாகப் பயன்படுத்தும் போது
1) ABCD 2) ABDE 3) ABCE 4) ACDE 5)BCDE (.............)

- **11- 15 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

11. மகாசேன மன்னன் கட்டிய தூபியின் பெயர் ................................ ஆகும்.

12. காற்பந்து விளையாட்டை முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு ................................. ஆகும்.

13. எகிப்திய ஜனாதிபதியான ....................................................... சுயெஸ்கால்வாயை மக்கள் மயப்படுத்தினார்.

14. 2024ஆம் ஆண்டு ஒலிம்பிக்விளையாட்டு .......................... நகரத்தில் இடம் பெற திட்டமிடப்பட்டுள்ளது.

15. பிரித்தானிய பெண் பிரதமர் ............................................... என்பவர் இரும்புப் பெண் எனும் பட்டப்பெயரால் அழைக்கப்பட்டார்.

- **இல 16 முதல் 25 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

16. அன்றைய பொறியியலாளர்கள் இடி மின்னலிலிருந்து பாதுகாப்புப் பெறும் பொருட்டு வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த உபகரணம் வரலாற்று மூலாதாரங்களில் எவ்வாறு அழைக்கப்பட்டது?

..........................................................................................................................................

17. நவீன மருத்துவத்துறையின் தந்தை என அழைக்கப்பட்டவர் யார்?

..........................................................................................................................................

18. இலங்கையில் சுனாமி பேரழிவு எப்போது ஏற்பட்டது?

..........................................................................................................................................

19. விண்வெளி ஓடத்தொழிநுட்ப எண்ணக்கருவின் மூலகர்த்தா யார்?

..........................................................................................................................................

20. நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையம் அமைந்துள்ள மாவட்டம் எது?

..........................................................................................................................................

- **இல 21 முதல் 25 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு அருகிலுள்ள உருவை பயன்படுத்துக.**

21.



1) உருவிலுள்ள நபர் யார்?

.........................................................................................

2) 1972 முதலாவது குடியரசு யாப்பின் பிரகாரம் இவர் வகித்த பதவி யாது?

.........................................................................................

22.



1) இவ்வுருவிலுள்ள இலச்சினைக்குரிய சர்வதேச அமைப்பு யாது? .............................................................................

2) இந்த அமைப்பை தோற்றுவிப்பதற்குப் பங்களிப்பு செய்த ரஷ்யத் தலைவர் யார்?

.........................................................................................

23.



1) இவ்வுபகரணத்தைப் பயன்படுத்தி வலு உற்பத்தியை மேற்கொள்ளப்பயன்படுத்தும் சக்தி முதல் எது?

..............................................................................

2) இம்முறையினால் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் போது பொருளாதார ரீதியாக எதிர்நோக்கும் மிக முக்கியமான பிரச்சினை யாது?

.........................................................................................

24. தரப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

**தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகள் சிலவற்றின் (HDI) சுட்டி**


| நாடுகள் | (HDI) சுட்டி | | நிலை | |
|---|---|---|---|---|
| | 2010 | 2012 | 2010 | 2012 |
| இலங்கை | 0.658 | 0.715 | 91 | 92 |
| இந்தியா | 0.519 | 0.554 | 119 | 136 |
| பாகிஸ்தான் | 0.490 | 0.515 | 125 | 146 |
| மலேசியா | 0.744 | 0.769 | 57 | 64 |
| சிங்கப்பூர் | 0.846 | 0.895 | 27 | 18 |
| அமெரிக்கா | 0.902 | 0.937 | 4 | 3 |
| ஐஸ்லாந்து | 0.869 | 0.906 | 17 | 13 |
| சியராலியோன் | 0.317 | 0.359 | 158 | 177 |

1) இங்கு HDI சுட்டி என்பது யாது?

........................................................................................................................................

2) முதல் வருடத்தினை விட இரண்டாவது வருடத்தில் இச்சுட்டியினது அதிகரிப்பைக் காட்டிய நாடு எது? ........................................................................................................................

25. **இலங்கையில் சனத்தொகை சாதாரண வருடாந்த வளர்ச்சி வீதம்**




1) இவ்வட்டவணையின் படி அதிக சனத்தொகை வளர்ச்சி வீதம் ஏற்பட்ட ஆண்டு எது?

........................................................................................................................................

2) சனத்தொகை வளர்ச்சி வீதம் குறித்த இரண்டு வருடங்களில் சம அளவிலும் குறைவான பெறுமானத்தையும் கொண்டுள்ளது. அப்பெறுமானம் யாது?

........................................................................................................................................

- **26 தொடக்கம் 30 வரையான வினாக்களில் A,B எனும் இரு நிரல்கள் தரப்பட்டுள்ளன. இவற்றை இணைப்பதனூடாக வரும் சரியான விடைக்குரிய இலக்கத்தை புள்ளிக் கோட்டில் இடுக.**

26. பிரதான சனத்தொகைக்கூட்டு / உரிய நாடுகள்

| A | B |
|---|---|
| 1. கிழக்காசியா | A. சீனா |
| 2. தெற்கு, தென்கிழக்கு ஆசியா | B. நியுயோர்க் |
| 3. வடமேற்கு ஐரோப்பா | C. பிரித்தானியா |
| 4. ஐக்கிய அமெரிக்காவின் வட கிழக்குக் கரையோர வலயம் | D. இந்தியா |

1) DABC  2) ADCB  3) ADBC  4) CABD  5) ACBD  (..........)

27.

| A | B |
|---|---|
| 1. இணக்கப்பாடு | A. குற்றவாளி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் |
| 2. கலந்துரையாடல் | B. எதிர்த்தரப்பினரிடையே கலந்துரையாடலை ஏற்படுத்தல் |
| 3. பேரம் பேசுதல் | C. தொழிலாளர் தொழில் தருநர் எனும் இரு தரப்பினர் காணப்படுதல் |
| 4. தீர்ப்புக்கூறல் | D. செலவு குறைந்த முறையாகக் காணப்படல் |

1) ABCD  2) BCDA  3) CDAB  4) ADBC  5) CBDA  (..........)

28.

| A | B |
|---|---|
| 1. அநுராதபுரம் | A. இசுறுமுனிய |
| 2. பொலன்னறுவை | B. விஜேசுந்தரராமய |
| 3. தம்பதெனியா | C. லங்காதிலக |
| 4. கம்பளை | D. கல்விகாரை |

1) ABCD  2) BCDA  3) CDAB  4) ADBC  5) DABC  (..........)

29.

| A | B |
|---|---|
| 1. துட்டகைமுனு மன்னன் | A. கலிங்க மாகன் |
| 2. வலகம்பாகு மன்னன் | B. சந்திரபானு |
| 3. பராக்கிரம பாண்டிய மன்னன் | C. பல்லுக |
| 4. 2ம் பராக்கிரமபாகு | D. பத்து திராவிடர்கள் |

1) ABCD  2) BCDA  3) CDAB  4) ADBC  5) CADB  (..........)

30. **A** **B**

| A | B |
|---|---|
| 1. கோல்புறூக் கமரன் | A. சட்டவாக்கக்கழகம், சட்டநிருவாகக்கழகம் |
| 2. குறுமக்கலம் | B. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை |
| 3. டொனமூர் | C. நிருவாகக் குழு முறைமை |
| 4. சோல்பறி | D. இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் |

1) ABCD 2) BCDA 3) CDAB 4) ADBC 5) DACB (..........)

- **இல 31 முதல் 35 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

31. 1) அனைத்து கரையோர நாடுகளினதும் கடற்கரையோரத்திலிருந்து கடல் மைல்களைக் கொண்ட எல்லை எவ்வாறு அழைக்கப்படும்?

..............................................................................................................................

2) சேனைப்பயிர்ச் செய்கை மற்றும் விவசாயத்துக்குப் பொருத்தமான மண் வகையைக்குறிப்பிட்டு, இம்மண்வகை காணப்படும் சுற்றாடல் வலயத்தினையும் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

3) வலுவை உற்பத்தி செய்யப்பயன்படுத்தப்படும் சக்தி உற்பத்தி மூலமொன்றைக் குறிப்பிட்டு, இதன் அனுகூலம், பிரதிகூலம் ஒவ்வொன்றை சுருக்கமாக விளக்குக.

..............................................................................................................................

..............................................................................................................................

32. 1) அரசியல் கட்சி முறையின் கீழ் இலங்கையில் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் இடம் பெற்ற ஆண்டு யாது? ..........................................................................................

2) இத்தேர்தலில் வெற்றி பெற்ற கட்சியினையும் தலைமைத்துவம் வகித்த தலைவரையும் குறிப்பிடுக....................................... ...................................................

3) சோல்பறி அரசியல் யாப்பின் கீழ் இங்கிலாந்தின் முடிக்குரிய பிரதிநிதி வகித்த புதிய பதவியைக் குறிப்பிட்டு, இப்பதவியின் தன்மையை சுருக்கமாக விளக்குக.

..............................................................................................................................

..............................................................................................................................

33. 1) ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமிக்கும் போது இவ்விராச்சியத்தை ஆட்சி செய்த மன்னன் யார்?

..............................................................................................................................

2) 1818 முதலாம் சுதந்திரக்கிளர்ச்சிக்கு தலைமை வகித்த தலைவர்கள் இருவரைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

3) இப்போராட்டம் தோல்வியுற்றமைக்கான காரணமொன்றை சுருக்கமாக விளக்குக.

..............................................................................................................................

..............................................................................................................................

34. 1) நாடுகளுக்கிடையில் இடம் பெறும் பல்வேறு வெளிநாட்டு உதவி முறைகள் பிரதானமாக 3 வகைப்படும். அவற்றுள் ஒன்றினைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

2) இலங்கைக்கு வெளிநாட்டு உதவி வழங்கப்படும் அமைப்புக்கள் இரண்டு தருக.

..............................................................................................................................

..............................................................................................................................

3) ஒரு நாடு சர்வதேச உறவுகளைப் பேணுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

..............................................................................................................................

35. 1) அமெரிக்காவைக் கண்டு பிடித்த பெருமை யாருக்குரியது?

..............................................................................................................................

2) வட அமெரிக்காப் பிரதேசத்தில் குடியிருப்புக்களை ஏற்படுத்திக் கொண்ட 02 ஐரோப்பிய இனத்தவர்களைக் குறிப்பிடுக.

..............................................................................................................................

..............................................................................................................................

3) அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவுகளில் ஒன்றை விளக்குக.

..............................................................................................................................

..............................................................................................................................

- **இல 36 முதல் 45 வரையில் தரப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் இலங்கைப் படத்தில் குறித்துப் பெயரிடுக.**

36. இலங்கையில் நிலநெய் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடம்
37. இலங்கையில் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்
38. கண்டி உடன்படிக்கை கைச்சாத்திட்ட இடம்
39. மகாபராக்கிரம பாகு மன்னனின் தக்கிண தேசம் எனும் மாயரட்டையின் நிருவாக மையம்
40. பத்தகச்சானா இளவரசி இந்நாட்டில் வந்திறங்கிய துறைமுகம்
41. கோல்புறூக் சீர்த்திருத்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட வட மாகாணத்தின் பிரதான நகரம்
42. மகாசேன மன்னன் கட்டிய குளம் அமைந்துள்ள நகரம்
43. பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்ததன் பின் சங்க தளபதியால் அமைக்கப்பட்ட கோட்டை அமைந்துள்ள இடம்
44. 2022 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின் படி அதிகளவு சனத்தொகையைக் கொண்ட மாவட்டங்களுள் மூன்றாம் இடத்தில் அமைந்துள்ள மாவட்டம்
45. கிழக்கு மாகாணத்தின் பிரதான நகரம்

- **46 முதல் 50 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள இடங்களை உலகப்படத்தில் குறித்துக் காட்டுக.**

46. இலங்கையின் கரையோரப் பிரதேசத்தை முதன் முதலாகக் கைப்பற்றிக் கொண்ட ஐரோப்பிய இனத்தவரின் நாடு
47. விசுவியஸ் எரிமலை அமைந்துள்ள ஐரோப்பிய நாடு
48. சார்க் அமைப்பின் செயலாளர் அலுவலகம் அமைந்துள்ள நகரம்
49. ஒல்லாந்தரின் கீழைத்தேய நிருவாக மத்திய நிலையம்
50. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது திருகோணமலைத்துறைமுகத்திற்கு அணுகுண்டு பொழிந்த நாடு

